**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 25/2017.**
**வழக்கு சாட்சி – அ.சா. 6 (பட்டியல் சாட்சி –6).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. அ. புதியவன். | ஜாதி | |
| தந்தை பெயர் | வி. அழகர். | தொழில் | ஆசிரியர். |
| கிராமம் | முத்துத்தேவன்பட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 59/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.

**(1–வது எதிரி ஆஜர். 2–வது எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 BNSS–இன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:–**

நான் தற்போது, முத்துத்தேவன்பட்டியில் குடியிருந்துகொண்டு, ஆசிரியராகப் பணிசெய்து வருகிறேன். கடந்த 24.12.2016 ஆம் தேதியன்று, மதியம் 12.00 மணிக்கு நானும், எனது நண்பர் ராஜீ என்பவரும் ஊருக்குச் செல்வதற்காக பழனிசெட்டிபட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டு இருந்தேன். அப்போது, பி.சி. பட்டி காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் எங்களது அருகில் வந்து, பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஜெயக்குமார் என்பவரைக் காண்பித்து, அவரை திருட்டு வழக்கு சம்பந்தமாக விசாரணைக்காக அழைத்து வந்ததாகவும், என்னையும், எனது நண்பர் ராஜீ என்பவரையும் பி.சி. பட்டி காவல் நிலையத்திற்கு சாட்சியாக இருப்பதற்காக அழைத்துச் சென்றார்கள். அங்குவைத்து, ஜெயக்குமார் என்பவர் எங்கள் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தார். பின்பு, காவல் சார்பு ஆய்வாளர் அதைப் பதிவு செய்துகொண்டார். அதன்பின்னர், தேனி, விஸ்வதாஸ் நகரிலுள்ள ஜெயக்குமார் என்பவரின் வீட்டில் எங்கள் இருவரையும், எதிரியுடன் சேர்ந்து காவல் ஆய்வாளர் அழைத்துச் சென்றார். அங்கு எதிரி வைத்திருந்த கம்மல், மோதிரம், கட்டிங் செயின் ஆகிய தங்கப் பொருட்களை எங்கள் முன்னிலையில் எதிரி ஆஜர் செய்தார். காவல் உதவி

ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து, மேற்படி வழக்குச் சொத்துக்களைக் கைப்பற்றி, அதில் நானும், ராஜீ என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுவது, எதிரி ஜெயக்குமார் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் ஆகும். அதிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

**(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும், குறுக்கு விசாரணை செய்யாதால், குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது).**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.03.16 17:52:13 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**